**கைலாஷ் மானசரோவர் யாத்திரை 2013ன் தொகுப்பு எண் 11 முதல் 14வரை ரத்து**

ஜூலை 8, 2013

உத்தராகண்ட்டில் ஏற்பட்ட அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக உருவான சூழல் குறித்து மறுபடியும் திறனாய்வு செய்ததைத் தொடர்ந்து கைலஷ் மானசரோவர் யாத்திரையின் இந்த ஆண்டிற்கான தொகுப்பு எண் 11 முதல் 14 வரையிலான பயணத்தை ரத்து செய்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

இந்த யாத்திரை அமைய உள்ள பாதையில் எலாகட், தாவாகட் மற்றும் கன்ஜோட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள 3 முக்கிய பாலங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளன. இவை மீண்டும் சீரமைக்கப்பட வேண்டியுள்ளது. மாநில மற்றும் உள்ளூர் நிர்வாக அதிகாரிகள் இந்த பணிகளை மேற்கொள்ள மேலும் ஒரு மாதத்திற்கும் மேல் ஆகும் என்று மதிப்பிட்டுள்ளனர்.

யாத்திரை தொகுப்பு எண் 15 முதல் 18 க்கான முடிவு 2013 ஜூலை மாதம் இறுதி வாரத்தில் மேற்கொள்ளப்படும் மறு ஆய்விற்குப்பின் முடிவு செய்யப்படும்.

மேலும் தகவல் பெற விரும்பும் பயணிகள், அமைச்சகத்தை sochina@mea.gov.in என்ற இமெயில் முகவரியில் தொடர்பு கொண்டோ, அல்லது 011- 23014900 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டோ தகவல் பெறலாம்.

**புதுதில்லி**

**ஜூலை 8, 2013**